Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, OCTOBER 31, 2023

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 31, 2023 | ஒளி: 09 கதிர் 117 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

# கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது



உலக சந்தையில் பாரிய அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வடைந்து வருகிறது.

ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை இன்று 90 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

# 2024இல் வருவது வரிகள் பட்ஜெட்

## சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள கோரிக்கை

## வருமான வரிக் கோப்புகளும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் திறக்கப்படும்



2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் முழுக்க முழுக்க சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

2024 ஜனவரி முதல் சொத்து வரி மற்றும் பரம்பரைச் சொத்து போன்ற புதிய வரிகளை விதிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு- செலவுத் திட்டத்திற்கான பொது முன்மொழிவுகளைக் கோரி நிதி அமைச்சின் செயலாளர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது வழமை என்றாலும் இவ்வருடம் அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படவில்லை என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை வெளியிட விடுக்கப்பட்ட நிபந்தனைக்குப் பிறகு மின் கட்டணம் உயர்த்தப்பட்டது போல் 2024ஆம் ஆண்டிற்கான பட்ஜெட், சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளின் அடிப்படையில் இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச வருமானத்தை தற்போதைய 9 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அதிகரிப்பதற்காக 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக புதிய வரிகளை அறிமுகப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ‘1977 யை அழுத்தவும்’

வெள்ளை, சிவப்பு நாட்டு அரிசி கிலோ கிராம் ஒன்று 220 ரூபாவாகவும், கீரி சம்பா கிலோ கிராம் 260 ரூபாவாகவும், சம்பா கிலோ கிராம் 230 ரூபாவாகவும், சிவப்பு, வெள்ளை பச்சை அரிசி கிலோ கிராம் 210 ரூபாவாகவும் நுகர்வோர் அதிகாரசபை கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்துள்ளது.

தொடர்ச்சி P2

# வெள்ளை வானில் வந்து கொள்ளை




புகஜிந்தன்

யாழ்ப்பாணம் வடமாராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் வெள்ளை வானில் சென்ற சிலர், வீடொன்றுக்குள் புகுந்து வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி, வீட்டில் இருந்த ஆவணங்கள், நகை மற்றும் பணம் என்பனவற்றை பலவந்தமாக எடுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (30) இரவு 9:45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கே.டி.எச் ரக ஹயஸ் வாகனத்தில் சென்றவர்களே இவ்வாறு கொள்ளையிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# “சரியான பாதைக்கு பொன்சேகா வருவார் ”



ஐக்கிய மக்கள் சக்தியின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகாவை சரியான பாதையில் கொண்டு செல்லும் பணியை ஆரம்பித்துள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, திங்கட்கிழமை (29) தெரிவித்தார்.

“பீல்ட் மார்ஷல் பொன்சேகாவுடன் எம்.பி.க்கள் குழு ஒன்று ஏற்கெனவே கலந்துரையாடி உள்ளதுடன், அவரை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு தேவையான வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



# திருமணம் நடத்திய பெண் பணிநீக்கம்

தன்னுடைய உறவினர் ஒருவருக்கு வெகு விமர்சையாக திருமணத்தை நடத்தி வைத்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ், பெண் ஊழியர் ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# சம்பளத்தை உயர்த்து






பல்வேறான கோரிக்கைகளை முன்வைத்து அரச ஊழியர்கள், நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை (30) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் அரச திணைக்களங்களில் சேவைகள் முடங்கியிருந்தன. சில இடங்களில் மதியநேர உணவு வேளையிலேயே ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

“ஆக்காதே! ஆக்காதே! கடனாளி ஆக்காதே!”, “எமது நியாயமான சம்பள உயர்வு கோரிக்கையினை ஏற்றுக்கொள்!”, “அரசே, அரச ஊழியரின் சம்பளத்தை 20,000 ரூபாவால் உயர்த்து!”, “வேண்டும் வேண்டும் சம்பள உயர்வு வேண்டும்” போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

– தமிழ்மிரர் நிருபர்கள்

# உத்தேச சொத்து வரி வருமானத்தை கூட்டும்



உத்தேச சொத்து வரியானது அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க உதவும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டு முழுமையான பகுப்பாய்வின் பின்னரே இது நடைமுறைப்படுத்தப்படும் என ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

கணிசமான அளவு சொத்து வைத்திருக்கும் நபர்களுக்கு மட்டுமே புதிய வரி விதிக்கப்படும் என்பதால், சாதாரண மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இது ஒரு முற்போக்கான வரியாகக் கருதும் அதேவேளை, இந்த வரி விதிப்பினால் உள்ளூராட்சி மற்றும் பொது மக்களும் பயனடைவார்கள்.

தொடர்ச்சி P2



# பிறப்பு குறைந்து இறப்பு கூடியுள்ளது

கடந்த 2 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், நாட்டில் உயிரிழப்போரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# யாசகரை பெற்றோல் ஊற்றி கொளுத்தியவர் கைது

உறங்கிக்கொண்டிருந்த யாசகர் மீது பெற்றோலை ஊற்றி, தீமூட்டி கொளுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளதாக ஹோமகம பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



# உலக வங்கி குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

புகஜிந்தன்

இலங்கைக்கான உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் (செயலாற்று) அனஜெடி தலைமையிலான குழுவினர் கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு திங்கட்கிழமை (30) விஜயம் மேற்கொண்டனர்.

வட மாகாணத்தில் உலக வங்கியின் சுமார் 1,400 மில்லியன் ரூபாய் நிதி பங்களிப்புடன் சுமார் 50க்கும் மேற்பட்ட பிரதேச வைத்தியசாலைகளின் தொழில்நுட்ப கூடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டதில் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகள் நிறைவடைந்த நிலையில் அதனை பார்வையிடும் முகமாக குறித்த குழுவினர் வருகை தந்தனர்.

தொடர்ச்சி P2

# 450 கறவைகள் இறைச்சிக்கு விற்பனை

செ.தி.பெருமாள்.டி சந்ரு



அக்கரபத்தனை-டயகம பகுதியிலுள்ள தேசிய பாற் பண்ணையில் இருந்து சுமார் 450 கறவைகள் பண்ணையில் உள்ள அதிகாரியால் அவ்வப்போது இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளது என பண்ணையில் பணி புரியும் தொழிலாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

# ஐ.ஜி.பிக்கான சேவை நீடிப்பு வியாழனுடன் நிறைவு




பொலிஸ் மா அதிபராக விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட மூன்று வாரகால சேவை நீடிப்பு நவம்பர் 2ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

தொடர்ச்சி P2

# கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நவம்பரில் மீண்டும் ஆரம்பம்

சண்முகம் தவசீலன், யது பாஸ்கரன்



கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகள் நவம்பர் 20ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் திங்கட்கிழமை (30) எடுத்து கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், அகழ்வு பணிகள் இன்றையதினம் (30) ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், பேராசிரியர் ராஜ் சோமதேவ சமூகமளிக்க முடியாததனால் கொக்குதொடுவாய் அகழ்வு பணியானது மீளவும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 2024இல் வருவது வரிகள் பட்ஜெட்

அதன்படி 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான வரிக் கோப்புகளும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் திறக்கப்படும் என்றும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது

இது இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்துமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கச்சா எண்ணெய் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் விரைவாக மேற்கொள்ளப்படவுள்ள எரிபொருள் விலை திருத்தத்தில் குறிப்பிடத்தக்களவு பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிக்கப்படுமென அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.



# 450 கறவைகள் இறைச்சிக்கு விற்பனை

நாட்டின் பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அவுஸ்திரேலியாவில் இருந்து பெரும் தொகையான நிதியைச் செலவு செய்து இந்த பண்ணைக்கு இந்த பசுக்கள் 2010ஆம் ஆண்டு தேசிய மிருக வளர்ப்பு அரச நிறுவனம் மூலம் கொண்டு வரப்பட்டன. அவ்வாறு கொண்டு வரப்பட்ட கறவைகள் பண்ணையில் தற்போது இல்லை என அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த பாற்பண்ணையில் 53 தொழிலாளர்கள் சேவையில் உள்ளனர்.

பண்ணையில் பணியாற்றும் உயர் அதிகாரிகள், கறவைகளை இறைச்சிக்காக நுவரெலியா, கம்பளை, நாவலப்பிட்டி, ஹட்டன், அக்கரபத்தனை ஆகிய பகுதிகளிலுள்ள இறைச்சி விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்துள்ளனர். தேசிய பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையில், சகல வசதிகளும் கொண்ட பண்ணையாக அக்கரபத்தனை- டயகம பண்ணை உள்ளது எனவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொழிலாளர்களின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாகப் பண்ணை அதிகாரி சுஜி பெர்ணாந்துவிடம் வினவியபோது, "தொழிலாளர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு தொலைபேசி மூலம் பதில் சொல்லவும் முடியாது. பண்ணைக்கு வந்தால், அதிகாரிகள் தகுந்த விளக்கம் தருவார்கள்" என்றார்.

# உத்தேச சொத்து வரி வருமானத்தை கூட்டும்

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை கருத்திற் கொண்டு இது தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் சொத்து பரிமாற்ற வரி திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சர்வதேச நாணய நிதியம் ( IMF) முன்னர் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊழியர் அளவிலான உடன்படிக்கைக்கு வருவதற்கு சமீபத்திய மதிப்பாய்வின் போது இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.






# உலக வங்கி குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

இவ்வாறு வருகை தந்தவர்களுக்கு கோப்பாய் வைத்தியசாலையில் வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் உயர் மட்ட கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண பதில் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் , வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையின் முன்னாள் பொறுப்பு அதிகாரி வைத்தியர் மகேந்திரன் , கோப்பாய் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் சிவா கோனேசன் ,ஜப்பான் ஜெயிக்கா நிறுவன அதிகாரிகள், உலக வங்கியின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# திருமணம் நடத்திய பெண் பணிநீக்கம்

கண்டி மாநர சபையின் நிதி திணைக்களத்தில் பணியாற்றும் பெண்ணே, நாளாந்த வருமான 51 இலட்சம் ரூபாயை நகர சபையின் கணக்கில் வைப்பிலிடாது, தன்னுடைய குடும்ப உறுப்பினர் ஒருவரின் திருமண உற்சவத்துக்குப் பயன்படுத்தியுள்ளார்.

இதனையடுத்தே நிதி திணைக்களத்தின் ஒரு பிரிவின் பிரதான முகாமைத்துவ சேவையில் கடமையாற்றும் பெண் அதிகாரியே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கண்டி மாநகர ஆணையாளர் இஷான் விஜேதிலக்க ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டு, குறித்த பணியாளரைப் பணி இடைநிறுத்தம் செய்வதற்கான பரிந்துரையை மாகாண பிரதம அமைச்சின் செயலாளர் மேனகா ஹேரத்துக்கு அனுப்பினார். அதன்பின்னர் மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமவன்சவுக்கு அனுப்பி வைத்தார்.

கண்டி மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் ஊழல்களைக் கருத்திற்கொண்டு மாநகர சபையின் கணக்குப் பிரிவில் செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் தபால் திணைக்களத்தின் ஊடாக மாநகரசபை கணக்கில் வரவு வைப்பதற்காக மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் இஷான் விஜேதிலக்க தெரிவித்தார்.

இதன்படி, நகர மக்கள் மாநகர சபைக்குச் செலுத்தும் வரி, குடிநீர் கட்டணம் போன்ற அனைத்து கொடுப்பனவுகளும் தபால் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தினசரி அடிப்படையில் நகராட்சி கணக்குகள் துறையினால் பெறப்படும் பணத்தைக் குறைக்கும் வகையில் பணி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# வெள்ளை வானில் வந்து கொள்ளை

பருத்தித்துறை பிரதேச சபையில் பணியாற்றிவரும் ஈஸ்வரன் என்பவரது வீட்டுக்குள் சென்று "உங்களுடைய அடையாள ஆவணங்களை காண்பியுங்கள் என்று தெரிவித்து" அவற்றை பார்வையிட்டனர்.

பின்னர் அனைத்து தொலைபேசிகளையும் பறித்துக்கொண்டனர். அவருடைய அடையாள அட்டையை பார்வையிட்டுள்ளதுடன், காணி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக வைத்திருந்த ஆவணங்களை சோதித்து, அந்த பைக்குள் இருந்த ரூபாய் 5 இலட்சம் பணம் மற்றும் ஆறரை பவுண் தங்க நகைகளையும் எடுத்துச்சென்றுவிட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாசகரை பெற்றோல் ஊற்றி கொளுத்தியவர் கைது

ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் ஆய்வுக்கூடத்துக்கு முன்பாக உறங்கிக்கொண்டிருந்த யாசகர் மீதே, சந்தேகநபர் மேற்கண்டவாறு செய்துள்ளார்.

மரணமடைந்த அந்த யாசகர், குறித்த ஆய்வுக்கூடத்துக்கு முன்பாக உறங்கிக்கொண்டிருக்கும் யாசகரைப் பல சந்தர்ப்பங்களில் "நீ குளிக்கமாட்டீர் இல்லையா? குளிக்காவிட்டால் தீ வைப்பேன்" என பலமுறை அந்த சந்தேநபர் கூறியுள்ளார்.

அதேபோல, ஞாயிற்றுக்கிழமை (29) இரவு பெற்றோலை ஊற்றிக் கொளுத்திவிட்டார்.

விபரீதத்தைக் கண்ட அங்கிருந்தவர்கள், யாசகரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அவ்வாறு அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தவர் திங்கட்கிழமை (30) காலை மரணமடைந்தார்.

64 வயதான தர்மதாஸ என்பவரே மரணமடைந்துள்ளார்.

சந்தேகத்தின் பேரில் 27 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பிறப்பு குறைந்து இறப்பு கூடியுள்ளது

2012ஆம் ஆண்டு ஜூலை முதல் 2013ஆம் ஆண்டு ஜூன் வரை இலங்கையில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 125,626ஆக பதிவாகியுள்ள போதிலும், 2022 ஜூன் முதல் 2023 ஜூன் வரை இலங்கையில் நிகழ்ந்த இறப்புகளின் எண்ணிக்கை 190,600 என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய 2022ஆம் ஆண்டை விட 2023ஆம் ஆண்டில் இலங்கையின் சராசரி வருடாந்த சனத்தொகை வளர்ச்சி குறைந்துள்ளதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் கூற்றுப்படி, பிறப்பு எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து, இறப்பு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

எவ்வாறாயினும், இந்த மரணங்கள் படிப்படியாக அதிகரித்து வருவதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

# "சரியான பாதைக்கு பொன்சேகா வருவார் "

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி காரியாலயத்தில் திங்கட்கிழமை (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த திஸ்ஸ அத்தநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவைப் போன்று பீல்ட் மார்ஷல் இறுதியாக சரியான பாதைக்கு வருவார் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்" என அவர் தெரிவித்துள்ளார்.

"நீங்கள் ஒரு அரசியல் கட்சியில் இருக்கும்போது பொது அறிக்கைகளை வெளியிடும்போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் உள்ளன. எங்களின் தனிப்பட்ட கருத்துகளை நாம் எப்போது வேண்டுமானாலும் முன்வைக்க முடியாது" என அண்மையில் பொன்சேகா வெளியிட்ட பல பகிரங்க அறிக்கைகளைக் குறிப்பிட்டு அத்தநாயக்க கூறினார்.

பொன்சேகா சஜித்தின் வேட்புமனுவை ஆதரிப்பாரா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் தீர்மானத்தைக் கட்சி மாற்றப் போவதில்லை என திஸ்ஸ அத்தநாயக்க பதிலளித்தார்.



# ஐ.ஜி.பிக்கான சேவை நீடிப்பு வியாழனுடன் நிறைவு

ஆனால், புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட வேண்டியவர்களின் பெயர்கள் அரசியலமைப்பு பேரவைக்கு முன்மொழியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்ரமரத்னவுக்கு சேவை நீடிப்பு மூன்று தடவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மூன்றாவது சேவை நீடிப்பு அரசியலமைப்பு பேரவை அங்கீகரிக்கவில்லை இதனையடுத்து, ஜனாதிபதியினால் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில், தேஷ்பந்து தென்னகோன், லலித் பதிநாயக்க மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோர் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தகுதி பெற்றுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நவம்பரில் மீண்டும் ஆரம்பம்

அதேநேரம் மிகுதியாக உள்ள செலவுத்தொகை பணம் எவ்வளவு என்பது தொடர்பில் கணிக்கப்பட்டு அதற்கான கணக்கறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவவினால் ஏற்கெனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தவிர்ந்த பிற பொருட்கள் தொடர்பில் பேராசிரியர் ராஜ் சோமதேவவுக்கு இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

குறித்த பகுதியில் 50 மீற்றருக்குள் வேறு மனித எச்சங்கள் இருப்பது சம்பந்தமாகக் கண்டுபிடிக்கக் கூடிய ராடர் கருவி ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு ராஜ்சோமதேவவினால் விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பான முழுமையான விபரங்களை நீதிமன்றிற்குச் சமர்ப்பிக்கும்படி நீதிமன்றத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**" அகழ்வு பணிகள் இன்றையதினம் (30) ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், பேராசிரியர் ராஜ் சோமதேவ சமூகமளிக்க முடியாததனால் கொக்குதொடுவாய் அகழ்வு பணியானது மீளவும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது**

# '1977 யை அழுத்தவும்'

இந்நிலையில், அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் 1977இற்கு உடனடியாக அறிவிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை நுகர்வோரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கண்டுபிடிக்கச் சோதனைகளை ஆரம்பித்துள்ளதாகவும், கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பல வியாபாரிகள் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்து வாடிக்கையாளர்களிடம் இருந்து தினமும் புகார்களைப் பெறுவதாக அதிகாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தடை செய்யப்பட்ட களைக்கொல்லிகள் மீட்பு

■ ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி கடற்பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இயந்திர படகு ஒன்றிலிருந்து தடைசெய்யப்பட்ட களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் ஞாயிற்றுக்கிழமை (29) மீட்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி விஜய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது, களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இருவர் கைது செய்யப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 43 மற்றும் 46 வயதுடைய இரண்டு மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவற்றின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாய் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவர், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட களைக்கொல்லிகள் மற்றும் அதனை கொண்டுவருவதற்காக பயன்படுத்தப்பட்ட இயந்திரப் படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



## விபத்தில் கணவன் பலி: மனைவி கைது



விபத்தொன்றில் கணவன் படுகாயமடைந்து பலியான சம்பவத்தை அடுத்து, அவரது மனைவியும், முறைகேடான கணவனும் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவனெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவனெல்ல-எலயபொல வீதிப் பகுதியில் கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காரொன்று மோதியதில் படுகாயமடைந்த ஒருவர், மாவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையில், இது சாதாரண விபத்து அல்ல, இறந்தவரின் மனைவி மற்றும் அவரது முறைகேடான கணவன் இணைந்து செய்த கொலை எனத் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே உயிரிழந்த கணவனின் மனைவியும், மனைவியின் முறைகேடான கணவனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் கூறியுள்ளனர்.



## ரயிலுடன் மோதி யானை மரணம்

■ அப்துல்சலாம் யாசீம்

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தபால் ரயிலுடன் இரண்டு யானைகள் மோதியதில் ஒரு யானை உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் கிதுல்உதுவ 154ஆம் கட்டைப் பகுதியில் சனிக்கிழமை (28) இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் யானை மின்வேலிகள் சிறந்த முறையில் இல்லாமையினால் யானைகள் அதிகளவில் விபத்துக்குள்ளாகி வருவதாக அப்பகுதியிலுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் ரயிலுடன் மோதி யானைகள் உயிரிழப்பது வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தும் விடயத்தில் உரிய முறையில் கவனம் செலுத்துவது இல்லையென சுட்டிக்காட்டியுள்ளதுடன், இனிவரும் காலங்களிலாவது யானைகளைப் பாதுகாப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மீனவரின் சடலம் மீட்பு



■ ரஸீன் ரஸ்மின்

தொடுவா கடற்பிரதேசத்தில் நீரில் மூழ்கிக் காணாமல்போன மீனவரின் சடலம் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம் - மஹவெவ, மட்டகொட்டுவ பகுதியைச் சேர்ந்த ஜோசப் அலோசியஸ் (வயது 65) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் திருமணமாகாத நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

மீன்பிடித் தொழிலுக்காக ஞாயிற்றுக்கிழமை (29) காலை கடலுக்குள் சென்ற மீனவர்கள் இருவர், பயணித்த மீன்பிடி இயந்திர படகு திடீரென கவிழ்ந்து இருவரும் கடலில் விழுந்து காணாமல்போயுள்ளனர். அங்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் ஒருவரைப் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

**“ காணாமல்போன மீனவரின் சடலம் அம்பகதவில பகுதியில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்**

எனினும், மற்றைய மீனவரைத் தேடி பிரதேச மீனவர்களுடன் இணைந்து கடற்படையினரும், பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், காணாமல்போன மீனவரின் சடலம் அம்பகதவில பகுதியில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## சௌமியமூர்த்தி தொண்டமானின் 24ஆவது சிரார்த்த தினம்



மலையகத்தின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான அமரர்.சௌமியமூர்த்தி தொண்டமானின் 24ஆவது சிரார்த்த தினமான திங்கட்கிழமை (30) பாராளுமன்ற கட்டட தொகுதியில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மருதபாண்டி ராமேஸ்வரன் எம்.பி மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வின் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் பூஜை வழிபாடுகளும் நடைபெற்றன.

## குற்றவாளியின் மகளுக்கு கோலாகலமாக விழா



இலங்கையில் அதிவிசேட பிரமுகர் ஒருவரைப் படுகொலைச் செய்த குற்றச்சாட்டில், குற்றவாளியாக இனங்காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு, பூஸ்ஸ சிறையில் அதிபாதுகாப்பு அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் குழுவின் உறுப்பினர் ஒருவரின் மகளுக்கு, கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் மிகவும் பிரமாண்டமான முறையில் பூப்புனித நீராட்டு விழா நடத்தப்பட்டுள்ளது.

பெருந்தொகை செலவழித்து பிரமாண்டமான முறையில் அந்த உற்சவம் நடத்தப்பட்டுள்ளது என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உற்சவமும் விருந்துபசாரமும் கடந்த 23ஆம் திகதி இரவு நடத்தப்பட்டுள்ளதாகவும் என்றும் அறியமுடிகின்றது.


அத்துடன், மிகவும் விலையுயர்ந்த அழைப்பிதழ் அட்டையும் அச்சிடப்பட்டுள்ளது. உற்சவத்துக்காக 150-200க்கும் உட்பட்டவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர் என்றும் அறியமுடிகின்றது.

உற்சவம் நிறைவடைந்ததும் கொழும்பு, கொம்பனி வீதியில் ஹோட்டலுடன் இருக்கும் முன்னணி வீட்டுத்தொகுதியின் அறையொன்றில் மற்றுமொரு பிரிவினருக்கு அன்றிரவு மீண்டும் விருந்து வைக்கப்பட்டுள்ளது என கூறப்படுகின்றது.

பூப்புனித நீராட்டு விழாவின் காட்சிகள், அலைபேசியின் வாயிலாக மரண தண்டனை கைதிக்கு நேரடி அஞ்சல் செய்யப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

## உதவாத வெங்காயத்தால் ஒருவருக்கு 6 மாத சிறை

■ ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம். நூர்தீன்



மனித பாவனைக்குதவாத பெரிய வெங்காயத்தை கொண்டுசென்ற ஒருவரை கைது செய்யப்பட்டதாக கோட்டைமுனை பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு கனரக லொறிமூலம் கொண்டுசெல்லப்பட்ட பெரிய வெங்காயமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனையின் பேரில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் குறித்த கனரக லொறி வியாழக்கிழமை (26) மடக்கிப் பிடிக்கப்பட்டு லொறியிலிருந்து மனித பாவனைக்குதவாத 40 மூடைகளைக் கொண்ட 960 கிலோ கிராம் பெரிய வெங்காயம் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது

சந்தேக நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஆறு மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார பரிசோதகர்கள் வேலை நிறுத்தம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திங்கட்கிழமை (30) மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் சுகாதார சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

இப்போராட்டத்தினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் உட்பட சுகாதார பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், மாவட்டத்திலுள்ள அனைத்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது.




## 50 கி.கி கேரளா கஞ்சா மீட்பு



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் சுமார் 50 கிலோ கிராம் கேரளா கஞ்சா ஞாயிற்றுக்கிழமை (29 ) கைப்பற்றப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, ஊரிக்காடு கடற்கரைப் பகுதியில் மர்ம பொதியொன்று இருப்பதாக இராணுவ புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய நடத்தப்பட்ட சோதனையின்போது சுமார் 50 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

எவரும் கைது செய்யப்படாத நிலையில், மீட்கப்பட்ட கஞ்சா வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன், சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடலுக்கு பாய்ந்த ஓட்டோ

■ பு.கஜிந்தன்

யாழ். பண்ணைப் பகுதியில் முச்சக்கரவண்டியொன்று வீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றே வேகக் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

முச்சக்கரவண்டியில் சாரதி உட்பட ஐவர் பயணித்துள்ளதுடன், மூன்று பெண்கள் மற்றும் ஒரு குழந்தை குறித்த விபத்தில் படு காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# காலநிலைக்கு உகந்த விவசாயத்துறையே அவசியமாகும்

எல்லா காலங்களிலும் எல்லா விவசாயத்தையும் எதிர்பார்க்க முடியாது என்பர். காலநிலைக்கு ஏற்றவகையில் விவசாயத்தை மாற்றிக்கொண்டே இருக்கவேண்டும். இன்றைய சூழலில் இரசாயன பாகுபாடுகள் கலந்த பொருட்கள் விவசாயத்தில் கட்டுப்பாடற்ற பயன்பாடாக காணப்படுகிறது. இவ் பயன்பாடானது பூமியில் மண், நீர், தாவரங்கள், விலங்கினங்கள், காற்று மற்றும் மனித உயிர்களின் ஆரோக்கியத்தில் தீங்கு விளைவிப்பவையாக உள்ளது.

இரசாயனம் கலந்த பொருட்களிலிருந்து வெளிப்படும் நீர்த்துளிகள் அதிகரித்து வருவதால் சுற்றுச்சூழல் அமைப்பு முறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக சுவாச அமைப்பு பாதிக்கப்படுவதை எடுத்து காட்டலாம். மேலும் மனித சமூகங்களுக்கும் பல நோய்கள் பரவுவதற்கும் ஒரு நெருக்கமான காரணமாக இருக்கின்றது.

உலக சுகாதார அமைப்பால் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் அறிக்கையில் " இலங்கையில் தினமும் சுமார் 80 நோயாளிகள் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரசாயன உர பயன்பாட்டினால் ஏற்படும் தாக்கங்களை இனங்கண்டு கொண்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இரசாயன உரத்தை முற்றாக தடைச் செய்து, சேதன பசளை உர பயன்பாட்டை வலியுறுத்தினார்.

எனினும், விவசாயத்தில் அறுவடையை எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கும் அடுத்த போகங்களுக்கு தயாராகவிருந்த விவசாயிகளுக்கும் பெரும் தலையிடியை கொடுத்தது. இரசாயன உரத்துக்கான திடீர் தடையால் பலரும் நட்டமடைந்தனர். தேயிலை, தென்னை உள்ளிட்ட துறைகளுக்கும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால், அன்றைய அரசாங்கத்துக்கு எதிராக விவசாயிகளும் களத்தில் இறங்கினர்.

இரசாயன உர பயன்பாட்டை கொஞ்சம், கொஞ்சமாக குறைத்து, சேதன உர பயன்பாட்டை மெதுவாக புகுத்தியிருந்தால், அந்த தீர்மானத்தில் வெற்றியீட்டி இருக்கலாம். அதேபோல, விவசாயிகளுக்கும் கையை கடித்திருக்காது. அதற்கான, காலம் கடந்துகொண்டிருக்கின்றது. ஆகையால், உர பாவனையில் மாற்றத்தை ஏற்படுத்தி சேதன பசளை பாவனையை ஊக்குவிக்க வழிசமைக்கவேண்டும். இல்லையேல் விவசாய நிலங்கள் யாவும் நச்சு நிலங்களாக மாறிவிடும். இதுவே, மனிதன் மட்டுமன்றி விலங்களுக்கும் இயற்கைக்கும் எதிரியாக மாறிவிடும்.

தீங்கு விளைவிக்கும் நச்சுப்பதாரத்தங்களை கொண்ட தயாரிப்புக்கள் நுகர்வோர்களின் இலக்கு மற்றும் பார்வையாளர்களை கையாள ஆக்கபூர்வமான சொற்களை பயன்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றது. எல்லோரும் அறிந்த விடயம், பூமியானது பல ஆபத்துக்களை சந்தித்து வருகிறது. எனவே அனைத்து உயிரினங்களின் இருப்புக்காகவும் அவற்றை பாதுகாப்பதற்காகவும், நிலைபேறான ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காகவும் எமது பொறுப்பு காணப்படுகிறது. இது எங்களின் தருணம் என உணர்ந்து எதிர்கால ஆரோக்கியத்தையும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் இஸ்ரேலும்

மொஹமட் பாதுஷா

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் புதுப்புது கதைகள், ஆதாரங்கள் வெளிக்கிளம்பிக் கொண்டே இருக்கின்றன. பலஸ்தீனத்தில் இஸ்ரேல் பெரும் மனிதப் பேரவலங்களை ஏற்படுத்தி வருகின்ற ஒரு காலகட்டத்தில், இலங்கையில் 2019 ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னணியிலும் இஸ்ரேல் இருந்திருக்க வேண்டும் என்று சந்தேகங்கள் இப்போது முன்வைக்கப்பட்டுள்ளன.**

இத்தாக்குதல் தொடர்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சனல் 4 தொலைக்காட்சியிலும், அதன் பிறகு வேறு இணைய ஊடகங்கள் ஊடாகவும் அசாத் மௌலானா வெளியிட்டிருந்த தகவல்கள் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தன. இப்போது இத்தாக்குதலுடன் இஸ்ரேலுக்கு தொடர்பிருந்திருக்கலாம் என்ற விடயத்தை பாராளுமன்றத்தில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

இப்படி பலதரப்பட்ட கதைகளும், சந்தேகங்களும் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிப்படையான, முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகளும் சூத்திரதாரிகளும் கண்டுபிடிக்கப்படாமையாலேயே ஆகும்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலை மேற்கொண்டது சஹ்ரான் கும்பல் என்பது உடனே மக்களுக்குத் தெரிய வந்து விட்டது. இதனை அடிப்படையாக வைத்து முஸ்லிம் சமூகம் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டதை உலகே அறியும்.

ஆனால், இலங்கை முஸ்லிம் சமூகத்திற்குக் கத்தோலிக்க மக்களைக் கொல்ல வேண்டிய எந்த முகாந்திரமும் இல்லை என்பதை உடனே விளங்கிக் கொண்ட அனைத்து இனங்களையும் சேர்ந்த நாட்டு மக்கள் இதன் பின்னணியில் ஒரு 'பெரிய மறைகரம்' இருந்திருக்கின்றது என்பதை உடனேயே அனுமானித்துக் கொண்டார்கள் இருப்பினும், முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறை தணிவதற்குப் பல வருடங்கள் எடுத்தன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது சர்வ சாதாரணமான சம்பவம் அல்ல. இதில் 269 பேர் உயிரிழந்ததுடன் 500 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மிக முக்கியமாக, இந்த தாக்குதல் கத்தோலிக்க தேவாலயங்களையும் நட்சத்திர ஹோட்டல்களையும் இலக்கு வைத்திருந்தது. இது மிகப் பெரியதொரு இன மோதல் நிலையை கொளுத்தி விட்ட சதித்திட்டமாகும்.

ஆயினும், இது தொடர்பாக முழுமையான விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படவில்லை என்பதுதான் இன்று வரை முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டாகும். அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்திற்கோ, பழிவாங்கப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்கோ இன்னும் நீதி கிடைக்கவில்லை.

இந்த நிலையிலேயே முன்னாள் புலி உறுப்பினரும் பின்னர் கிழக்கு முதலமைச்சராக இருந்தவருமான தற்போதைய இராஜாங்க அமைச்சர் எஸ்.சந்திரகாந்தனின் (பிள்ளையானின்) வலது கரமாகச் செயற்பட்ட அசாத் மௌலானா அண்மையில் சனல் 4 தொலைக்காட்சி ஊடாக வெளியிட்ட கருத்துக்கள் பெரும் சர்ச்சையைக் கிளறி விட்டிருந்தன.

இந்த தாக்குதலுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்ட கூட்டுக் களவாணியான மௌலானா, இத் தாக்குதலுடன் பிள்ளையானுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் சில பாதுகாப்பு உயரதிகாரிகளுக்கும் தொடர்பிருந்ததாகக் கருத்துக்களை முன்வைத்திருந்தார். ஆட்சி மாற்றத்திற்காக இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என்பதுதான் சாரம்சமாகும்.

இந்த தாக்குதல் தொடர்பாக இந்தியா ஏற்கனவே இலங்கையை எச்சரித்திருந்ததாகக் கூறப்பட்டது. அத்துடன், தாக்குதல் இடம்பெற்று சில மணி நேரங்களுக்குள்ளேயே இந்தியத் தொலைக்காட்சிகள் சில தகவல்களை வெளியிட்டன. அதுமட்டுமன்றி புளஸ்தினி என்கின்ற சாராவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்பு பற்றியும் பேச்சடிபட்டது.

ஆகவே, இந்த விவகாரத்தில் இந்தியாவில் உள்ள எந்த தரப்பிற்கோ இதில் தொடர்பிருக்கலாம் அல்லது அவர்கள் முன்கூட்டியே திட்டத்தை அறிந்திருக்கலாம் என்ற சந்தேகம் குறிப்பாக முஸ்லிம் சமூகத்திற்கு ஆரம்பத்தில் ஏற்பட்டது. ஆனால், அதனை உறுதி செய்வதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. பல்வேறு கோணத்திலான கதைகளே பின்னர் வெளிவந்தன எனலாம்.

இது ஒரு ஆட்சி மாற்றத்திற்காக நிகழ்த்தப்பட்டது என்றாலும், இத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார்? இதற்குப் பின்னால் வெளிநாடுகள், வெளிநாட்டுச் சக்திகள் அல்லது புலனாய்வு அமைப்புக்கள் இருந்துள்ளனவா?

இதில் ஏன் சஹ்ரான் கும்பல் ஈடுபட்டார்கள் ? இது தொடர்பில் இதுவரை திருப்திகரமான விசாரணையொன்று நடத்தப்படாமல் ஏன் இழுத்தடிக்கப்படுகின்றது? என்பது பொதுவாக நாட்டு மக்கள் எல்லோருக்கும் இருக்கின்ற கேள்விகளாகும்.

இந்தக் கேள்விகளுக்கு எவ்வித விடையும் இல்லாமலேயே நான்கரை வருடங்கள் கழிந்து விட்டன. இந்நிலையில், அசாத் மௌலானா கூறிய விடயங்கள் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தியிருந்தாலும் கூட வழக்கம் போல இரு விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, இரு வாரங்களின் பின்னர் எல்லாம் அடங்கிப் போயிருக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே, இஸ்ரேல் இப்போது அகன்ற பலஸ்தீனத்தில் பெரும் யுத்தமொன்றை மேற்கொண்டு வருகின்றது. ஹமாஸை காரணம் காட்டி தாக்குதலை நடத்துவதன் மூலம் சர்வதேச போர் விதிமுறைகள், மனிதாபிமான சட்டங்கள் எல்லாவற்றையும் இஸ்ரேல் மீறி வருகின்றது. அத்துடன், போர்க் குற்றங்களும் வெளிப்படையாகவே இஸ்ரேலினால் இழைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கெதிராக பெரும்பாலான உலக நாடுகள் குரல் கொடுக்கின்றன. இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் ஒரு சில நாடுகளில் உள்ள இலட்சக்கணக்கான மக்களும் பலஸ்தீன மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற இனவழிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். யுத்தத்தை நிறுத்துமாறு, இஸ்ரேலை உருவாக்குவதற்காக முன்னின்ற ஐ.நா. சபை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

ஆனால், சியோனிச-இஸ்ரேல் அரசு எதனையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கண்ணுக்கு முன்னே இன அழிப்பும் மனித உரிமை மீறலும் போர்க்குற்றமும் மேற்கொள்ளப்பட்டு, பெரும் மனிதப் பேரவலம் நடந்தேறிக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, உலகம் இன்னும் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் செய்யாமல் இருக்கின்றது எனலாம்.

இவ்வாறான நிலையில். கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் எம்.பி ஒரு குண்டை தூக்கிப் போட்டுள்ளார்.

அவர் கூறியதாவது,"உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இடம்பெற்று சில தினங்களுக்குப் பின்னர் கத்தோலிக்க சமயத் தலைவரான பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை நாங்கள் சந்தித்தோம். அப்போது பேராயர், இது மத்திய கிழக்கு நாடொன்றின் வேலை. இதன் பின்னணியில் இஸ்ரேல் இருந்திருக்கலாம்" என்று தனது சந்தேகத்தை எம்மிடம் தெரிவித்தார்.

'நீங்கள் ஏன் இதற்காகக் கவலைப்படுகிறீர்கள். தாக்குதலுக்கு இந்நாட்டு முஸ்லிம்கள் பொறுப்பானவர்கள் அல்லர் என்று பேராயர் எம்மிடம் கூறினார். நானும் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, கபீர் ஹாசீம், ரிசாத் பதியுதீனும் அங்கிருந்தோம்' என்றார் ஹக்கீம்.

மு.கா. தலைவர் அத்தோடு நிற்கவில்லை. இன்னுமொரு விடயத்தையும் சபைக்குச் சுட்டிக்காட்டினார். அதாவது, அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில், சஹ்ரான் குழுவினர் இஸ்ரேலின் புலனாய்வுத் துறையுடன் தொடர்புபட்டிருப்பதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று சொன்னார்.

குறிப்பாக, பக்கம் பின் அபூ என்பவர் பற்றிய சஹ்ரானின் முகநூல் பதிவொன்றை இட்டுள்ளார். பின்னர் அதற்குப் பதிலளித்துள்ள பக்கம் பின்அபூ, சஹ்ரான் இஸ்ரேலின் முகவர் எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயங்கள் விசாரணை அறிக்கையில் உள்ளன. ஏற்கனவே கர்தினால் வெளியிட்ட சந்தேகத்தை இது மேலும் வலுப்படுத்துகின்றது என்று மு.கா. தலைவர் இந்த நாட்டின் உயரிய சபையில் தெரிவித்துள்ளார். இது மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே இது புறக்கணிக்கப்பட முடியாத விடயமாகும். உலக அரங்கில் இஸ்ரேலும், சியோனிசமும் செய்து கொண்டிருக்கின்ற குழப்படிகளை மூவாயிரம் ஆண்டு வரலாறு நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

எனவே. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் சஹ்ரான் குழுவுக்கு மேலதிகமாக, உள்நாட்டு அரசியல் தரப்புகள் மட்டுமே சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று மக்கள் இதுவரை நினைத்துக் கொண்டிருந்தனர்.

இந்த தாக்குதலுக்கும் அல்லது சஹ்ரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தொடர்பிருந்திருப்பதாக விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயம் கூட வெளிச்சத்திற்கு வரவில்லை. அதனை றவூப் ஹக்கீம் வெளிக்கொணர்ந்துள்ளார்.

எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக உண்மையான, வெளிப்படையான விசாரணைகளை நடத்துவதன் அவசியம் மேலும் அதிகரித்திருக்கின்றது.



## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்களுக்கு கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வன்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது, வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.


உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல, மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை. பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### கட்டாக்காலி நாய்களால் அச்சம்

மஸ்கெலியா நகரில் தெருநாய்கள் கூட்டம் அலைமோதுவதால் பாடசாலை மாணவர்கள் உட்பட மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

பள்ளி மாணவ, மாணவிகள், நகருக்கு வரும் மக்கள், நகரவாசிகள், அரச ஊழியர்கள், தனியார் துறையினர் உட்பட பலரும் கடும் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

நகரில் கூட்டம் கூட்டமாகச் சுற்றித்திரியும் நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் கூறும் நகர மக்கள், இந்த நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூசி போடப்படாததால் பாடசாலை மாணவர்கள் மற்றும் வெளியில் இருந்து வருபவர்களும் மிகுந்த அச்சத்தில் உள்ளதாகக் கூறுகின்றனர்.

நகரின் ஒவ்வொரு தெருக்களிலும் நாய்கள் கூட்டம் அலைமோதுவதால் வீதிகளில் நடமாடுவது மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள், இது தொடர்பில் சுகாதாரத்துறை அதிகாரிகள் உடனடி கவனம் செலுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளும் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். சிலவேளைகளில் கட்டாக்காலி நாய்கள் கூட்டமாக, வீதிகளில் அங்குமிங்கும் அலைவதால், கவன சிதறல் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாகவும், இதனால் வீதி விபத்துகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

- காமினி பண்டார இலங்கதிலக்க

# நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் அடித்தளம் தூக்கம்



திருமதி. மாதங்கி சுதர்சன்
தாதிய உத்தியோகத்தர்
உளவியல் துறை
மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

**தூக்கம் என்பது நமது உடல் மற்றும் மனம் இரண்டிற்கும் ஒரு ஓய்வுகாலத்தை வழங்குகின்ற அன்றாட வாழ்வின் இன்றியமையாத ஒரு செயற்பாடாகும். போதுமான தூக்கமனது நினைவாற்றலை அதிகரித்தல், ஒரு செயலில் சிந்தனையை குவிக்கும் ஆற்றல் மற்றும் மனதினை புத்துணர்வாக வைத்திருத்தல் போன்றவற்றிற்கு உதவுகிறது.**

இதற்கு நேர்மாறாக, மோசமான தூக்கத்தின் தரம் அல்லது தூக்கமின்மை கடுமையான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும், அதாவது மனச்சோர்வு, பதட்டம், நீரிழிவு மற்றும் இதய நோய் போன்ற நாட்பட்ட சுகாதார நிலைமைகள் அதிகரிக்கும். இந்த கட்டுரை நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் அடித்தளமான தூக்கத்தின் முக்கியத்துவத்தைக் கூறுவதுடன், உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் தூக்கக் குறைபாட்டின் விளைவுகள் மற்றும் சிறந்த தூக்கப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கான உத்திகளை ஆராய்கின்றது.

தூக்கம் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகும். போதுமான தூக்கம் பலவிதமான உடல் மற்றும் மனநல நலன்களுடன் செல்வாக்கு செலுத்துகின்றது, அதேநேரத்தில், மோசமான தூக்கம் அல்லது தூக்கமின்மை கடுமையான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். சிறந்த தூக்கப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான உத்திகளான, நிலையான தூக்கத்தை ஏற்படுத்துதல், வசதியான தூக்கத்தைத் தூண்டும் சூழலை உருவாக்குதல், வழக்கமான உடற்பயிற்சியில் ஈடுபடுதல் மற்றும் படுக்கைக்கு முன் திரை நேரத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை அடங்கும். தூக்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தனிநபர்கள் தங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்த முடியும், இது சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கு வழிவகுக்கும்.

தூக்கத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் இடையிலான தொடர்பு பல ஆய்வுகள் மூலம் நன்கு நிறுவப்பட்டுள்ளது. தொடர்ந்து போதுமான அளவு தூங்குபவர்களுக்கு உடல் பருமன், இதய நோய் மற்றும் நீரிழிவு போன்ற நாட்பட்ட சுகாதார நிலைமைகளை உருவாக்கும் ஆபத்து குறைவாக இருப்பதாக ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது(*Touitou et al.*, 2017). மற்றொரு ஆய்வில், குறுகிய தூக்கம் மற்றும் மோசமான தூக்கம் உயர் இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்கான அபாயத்துடன் தொடர்புடையது என்று கண்டறியப்பட்டுள்ளதுடன்(*Grandner et al*, 2016), மேலும் தூக்கமின்மை *Type* 2 நீரிழிவு நோயை உருவாக்கும் அபாயத்துடன் தொடர்புடையது.(*Liu et al*, 2018).

உடல் ஆரோக்கியத்துடன், நல்ல மன ஆரோக்கியத்தைப் பராமரிப்பதில் தூக்கமும் முக்கிய பங்கு வகிக்கிறது. தூக்கம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும், ஆரோக்கியமான முடிவெடுப்பதை ஊக்குவிக்கவும், ஒட்டுமொத்த மனநிலையை மேம்படுத்தவும் உதவுகிறது. *National Sleep Foundation* (2022) கூற்றுப்படி, குறைந்தளவான தூக்கம் எரிச்சல், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் ஏற்படும் சிரமம் போன்றவற்றிற்கு வழிவகுக்கும். தூக்கமின்மை மனச்சோர்வு மற்றும் பதட்டத்தை உருவாக்கும். தூக்கமின்மை மன அழுத்த ஹோர்மோன்களின் (*hormones*) அளவை அதிகரிக்க வழிவகுக்கும், இது மனச்சோர்வு மற்றும் பதட்டத்தின் அறிகுறிகளை அதிகரிக்கலாம்.

மேலும், உடலின் நோயெதிர்ப்பு தன்மை சரியாக செயற்படத் தூக்கம் அவசியம். தூக்கத்தின் போது, உடல் சைட்டோகைன்களை (*cytokines*) உற்பத்தி செய்கிறது. அவை தொற்று, மற்றும் மன அழுத்தத்தை எதிர்த்துப் போராட உதவும். ஒரு நபருக்கு போதுமான தூக்கம் இல்லையென்றால், அவரது நோயெதிர்ப்பு தன்மை சரியாகச் செயற்படாமல், தொற்று மற்றும் நோய் ஏற்படுவதற்கான அதிக ஆபத்தை ஏற்படுத்தும்.

அறிவாற்றல் செயற்பாட்டிற்கும் மற்றும் மன ஆரோக்கியத்திற்கும் போதுமான தூக்கம் முக்கியமானதாகும். நினைவாற்றல் மற்றும் கற்றல் செயற்பாடுகளில் தூக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. தூக்கத்தின் போது, மூளையானது தகவல்களைச் செயலாக்கி ஒருங்கிணைக்கிறது, இது நினைவாற்றலைத் தக்கவைத்து நினைவுபடுத்த உதவுகிறது. இதனால்தான் தகவல்களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய மாணவர்களுக்கும் நிபுணர்களுக்கும் தூக்கம் அவசியம்.

நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வைப் பராமரிப்பதில் தூக்கம் ஒரு முக்கிய அங்கமாகும் என்பது தெளிவாகிறது. துரதிர்ஷ்டவசமாக, பல நபர்கள் வாழ்க்கை முறை பழக்கவழக்கங்கள் மற்றும் மருத்துவ நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் போதுமான தூக்கத்தைப் பெறப் போராடுகிறார்கள். இருப்பினும், சிறந்த தூக்கப் பழக்கத்தை மேம்படுத்துவதற்குப் பல உத்திகளைப் பயன்படுத்தலாம்.

தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கான மிகவும் பயனுள்ள உத்திகளில் ஒன்று நிலையான தூக்க வழக்கத்தை ஏற்படுத்துவதாகும். வார இறுதி நாட்களில் கூட, ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் படுக்கைக்குச் செல்வதும் விழிப்பதும் இதில் அடங்கும். இந்த வழக்கம் உடலின் உள் கடிகாரத்தை ஒழுங்குபடுத்த உதவுகிறது, இது தூங்குவதையும் இயற்கையாக எழுந்திருப்பதையும் எளிதாக்குகிறது.

சிறந்த தூக்கத்தை ஊக்குவிப்பதற்கான மற்றொரு பயனுள்ள உத்தி, வசதியான தூக்கச் சூழலை உருவாக்குவதாகும். படுக்கையறை குளிர்ச்சியாகவும், இருட்டாகவும், அமைதியாகவும் இருப்பதை உறுதி செய்வது இதில் அடங்கும். வசதியான மெத்தை மற்றும் தலையணையைப் பயன்படுத்துவதும் தூக்கத்தின் தரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும்.

இந்த உத்திகளுக்குக் கூடுதலாக, தூக்கத்தின் தரத்தை மேம்படுத்தப் பல வாழ்க்கை முறை மாற்றங்கள் செய்யப்படலாம். காஃபின் (*caffeine*), நிகோடின் (*nicotine*) மற்றும் மதுசாரம் (*alcohol*) போன்றவற்றின் தூண்டுதல்களைக் கட்டுப்படுத்துதல் தூக்கத்தின் தரத்தில் நேரான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த பொருட்கள் தூக்க முறைகளைச் சீர்குலைத்து, தூங்குவதைக் கடினமாக்குகிறது. வழக்கமான உடற்பயிற்சியில் ஈடுபடுவது சிறந்த தூக்கத்தை ஊக்குவிக்கும், ஏனெனில் இது மன அழுத்தம் மற்றும் பதட்டம் ஆகியவற்றைக் குறைக்க உதவுகிறது. இது பெரும்பாலும் மோசமான தூக்கத்தின் தரத்துடன் தொடர்புபட்டுள்ளது.


இலத்திரனியியல் சாதனங்களிலிருந்து வெளிவரும் நீல ஒளி, தூக்கம்-விழிப்பு சுழற்சிகளை ஒழுங்குபடுத்தும் மெலடோனின் (*melatonin*) என்ற ஹோர்மோனின் இயற்கையான உற்பத்தியைச் சீர்குலைக்கும் என்பதால், படுக்கைக்கு முன் திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவதும் முக்கியமாகும்.

அதற்குப் பதிலாக, வாசிப்பு, தியானம் அல்லது சூடான குளியல் போன்ற செயல்களில் ஈடுபடுவது தூக்கத்தின் தரத்தை மேம்படுத்தவும் உதவும்.

இந்த உத்திகளைச் செயற்படுத்தினாலும் தூக்கத்துடன் அவதிப்படும் நபர்களுக்கு, பல மருத்துவ உத்திகள் பயனுள்ளதாக இருக்கும். இந்த உத்திகளில் பரிந்துரைக்கப்பட்ட தூக்க உதவிகள் (*sleep aids*), தூக்கமின்மைக்கான அறிவாற்றல்-நடத்தை சிகிச்சை (*CBT-I*) அல்லது அடிப்படை தூக்கக் கோளாறுகளுக்கான பிற மருத்துவச் சிகிச்சைகள் ஆகியவை அடங்கும்.

இறுதியாக, தூக்கம் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகும். போதுமான தூக்கம் பலவிதமான உடல் மற்றும் மனநல நலன்களுடன் தொடர்புபட்டுள்ளது. சிறந்த தூக்கப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான உத்திகள், நிலையான தூக்கத்தை ஏற்படுத்துதல், வசதியான தூக்கச் சூழலை உருவாக்குதல், தூண்டுதல்களைக் கட்டுப்படுத்துதல், வழக்கமான உடற்பயிற்சியில் ஈடுபடுதல் மற்றும் படுக்கைக்கு முன் திரை நேரத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

தூக்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தனிநபர்கள் தங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்த முடியும், இது சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கு வழிவகுக்கும்.



# ரம்பாவையே மிஞ்சிய சாக்ஷி



தமிழ் சினிமாவில் அட்லீ இயக்கத்தில் வெளியான "ராஜா ராணி" திரைப்படத்தின் மூலம் திரையுலக பிரவேசம் அடைந்த நடிகை தான் சாக்ஷி அகர்வால்.

மொடல் அழகியாக வலம் வந்த சாக்ஷி தமிழ், கன்னடம் மற்றும் மலையாளம் என்று மூன்று மொழிகளில் பல திரைப்படங்களில் சிறு சிறு கதாபாத்திரம் ஏற்று நடித்து புகழ் பெற்றார்.

"ராஜா ராணி" படத்தில் நடித்து அறிமுகமாகி பின்னர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் "காலா" திரைப்படத்தில் நடித்து பிரபலமானமை குறிப்பிடத்தக்கது.

திரைப்படங்களில் நடித்துக்கொண்டே அடிக்கடி தனது ட்விட்டர் பக்கத்தில் கவர்ச்சியாக பல போட்டோஷூட்டுகளை வெளியிட்டு வரும் சாக்ஷி அகர்வால், தற்போது படு கவர்ச்சியான உடையில் தொடை அழகை காட்டி போஸ் கொடுத்து அந்த அழகில் ரம்பாவையே மிஞ்சிவிட்டார்.



# ரூ.1 கோடி நன்றி கடன்

தீபாவளிக்கு 'ஜப்பான்' வெளியாகும் இந்தப் படம் கார்த்திக்கு 25ஆவது படமும் கூட. இந்த படத்தில் இவருக்கு ஜோடியாக அனு இமானுவேல் நடித்துள்ளார். இந்த படத்தின் ஓடியோ மற்றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நடிகர் கார்த்தி தனது 25ஆவது படத்தை முன்னிட்டு மக்களுக்கு உதவும் வகையில் 1 கோடி வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

நிதி பற்றாக்குறையால் சிரமப்படும் 25 பாடசாலைகள் தேர்வு செய்யப்பட்டு பாடசாலை ஒன்றுக்கு தலா ரூ.1 லட்சம் நிதியாக வழங்கப்பட உள்ளது.

# கவர்ச்சியில் ரைசா

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் பிரபல நிகழ்ச்சியான "பிக் பாஸ்". சீசன் 1இல் மக்கள் மத்தியில் அதிகமாக பேசப்பட்ட நடிகையாக "ரைசா வில்சன்" காணப்பட்டார். இவர் முதலில் மொடல் நடிகையாக அறிமுகமானார். "பிக் பாஸ்" நிகழ்ச்சியிலிருந்து வெளியேறியதும் 2018இல் வெளியான "பியார் பிரேமா காதல்" என்ற படத்தின் மூலம் ஹீரோயினாக அறிமுகமானார். பின் "காபி வித் காதல்" என்ற படத்தில் நடித்துள்ளார். தற்போது "காதலிக்க யாருமில்லை" என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இணையத்தில் படு ஆக்டிவ்வாக இருக்கும் ரைசா. தற்போது அடிக்கடி போட்டோஷூட் எடுத்து வருகிறார்.





# ஜொலிக்கும் தமன்னா

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை தமன்னா. தமிழில் "கேடி" படத்தின் மூலம் வில்லியாக அறிமுகமானார். பின்னர் பல படங்களில் முன்னணி ஹீரோக்களுடம் நடித்து பிரபலமானார்.

சில ஆண்டுகளுக்கு முன் தெலுங்கில் வெளியான "பாகுபலி" படத்தின் மூலம் நடிகை தமன்னாவிற்கு சினிமா மார்க்கெட் எங்கேயோ சென்றதோடு ரஜினியின் ஜெயிலர் படத்திலும் நடித்திருந்தார்.






# ஆட்டம் போட்ட யாஷிகா

தமிழ் சினிமாவில் 'துருவங்கள் பதினாறு' படத்தில் நடித்ததன் மூலம் நடிகையாக அறிமுக மானவர் யாஷிகா ஆனந்த்.

பிக் பாஸ் போட்டியாளரான பின்னர் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார்.

இதனையடுத்து, துருவங்கள் பதினாறு, இருட்டு அறையில் முரட்டுகுத்து, நோட்டா உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார்.

படுகவர்ச்சியான புகைப்படங்களை வெளியிட்டுவரும் யாஷிகா தற்போது ஜொலி ஜொலிக்கும் உடையில் கிளு கிளுப்பாக ஆட்டம் போட்ட வீடியோவை வெளியிட்டு ரசிகர்களின் பார்வைக்கு விருந்தளித் துள்ளார்.



அமெரிக்கா

# “அரபு நாட்டினரை தடை செய்வேன்”



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், தனது முந்தைய பதவிக்காலத்தில் ஈரான், லிபியா, சோமாலியா, சிரியா, ஏமன் உள்ளிட்ட அரபு நாடுகளிலிருந்து அந்நாட்டு மக்கள் அமெரிக்காவுக்குள் வருவதை தடை செய்யும் விதமாக பல கட்டுப்பாடுகளை புகுத்தினார். ஆனால், டிரம்பிற்கு பிறகு பதவிக்கு வந்த ஜோ பைடன், இந்த உத்தரவுகளை நீக்கி விட்டார்.

அடுத்த வருடம் அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. மீண்டும் பதவிக்கு வர மும்முரமாக களமிறங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி டிரம்ப், நிவேடா மாநில லாஸ் வேகாஸ் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குடியரசு கட்சியின் யூதர்களுக்கான கூட்டமைப்பில் உரையாற்றினார்.

அப்போது, “2017இல் நான் ஒரு சில அரபு நாடுகளிலிருந்து மக்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதை தடை செய்ய பல கட்டுப்பாடுகளை கொண்டு வந்திருந்தது நினைவிருக்கிறதா? 2024 தேர்தலில் வென்றதும் முதல் வேலையாக இந்த கட்டுப்பாடுகளை மீண்டும் கொண்டு வருவேன். பயங்கரவாதிகளை அமெரிக்காவிற்கு வெளியே நிறுத்தி விடுவேன் என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

காசா

# இஸ்ரேலுக்கு ஹமாஸ் நிபந்தனை

இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போர் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த போரில் ஹமாஸ் அமைப்பினரை ஒட்டுமொத்தமாக அழிக்கும் நோக்கிலும், ஹமாஸ் படையினர் கட்டுப்பாட்டில் இருக்கும் பிணைக் கைதிகளை விடுவிக்கும் நோக்கிலும் இஸ்ரேலிய இராணுவ படை காசாவில் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த தாக்குதல்களில் இரு தரப்பிலும் பலத்த உயிர் சேதம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐ.நா மற்றும் உலக நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தங்களிடம் உள்ள பிணைக்கைதிகளை விடுவிக்க வேண்டுமெனில் இஸ்ரேல் சிறையில் வாடும் பலஸ்தீன கைதிகளை விடுவிக்க வேண்டும் என ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்கு நிபந்தனை விதித்துள்ளது.



பங்களாதேஷ்

# எதிர்க்கட்சி தலைவர் கைது



பங்களாதேஷ் எதிர்க்கட்சியான தேசியக் கட்சியின் தலைவர் மிர்சா ஃபக்ருல் நாட்டை சீர்குலைக்க முயன்றதாக குற்றம் சாட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்து, பங்களாதேஷ் பிரதமர் ஷீக் ஹசீனாவுக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்து வருகின்றது.

பங்களாதேஷ் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள பொது தேர்தல் நியாயமாக இடம்பெறவேண்டும் என்றால், பிரதமர் ஷிக் ஹசீனா பதவியில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று எதிர் கட்சியினர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். மேலும் மிர்சா ஃபகுருல் தலைமையில் கடந்த வாரம் பிரதமர் ஷீக் ஹசீனாட பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று தலைநகரத்தில் போராட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரண தண்டனைக்குள்ளான இந்தியர்களை

# விடுதலை செய்ய நடவடிக்கை




கட்டார் நாட்டில் உள்ள தாஹ்ரா குளோபல் டெக்னாலஜிஸ் என்ற தனியார் நிறுவனத்தில் இந்தியக் கடற்படையில் ஒய்வுபெற்ற கேப்டன்கள் 8 பேர் பணியாற்றி வந்தனர்.

இந்த நிறுவனம் கட்டார் ஆயுதப்படையினருக்கான பயிற்சி உள்பட பல்வேறு சேவைகளை அளித்து வருகிறது.

இந்நிலையில், இந்தியக் கடற்படையின் முன்னாள் அதிகாரிகளான 8 பேரும் இஸ்ரேலுக்கு ஆதரவாக உளவு பார்த்ததாகக் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் 8 இந்தியர்களுக்கும் மரண தண்டனை விதித்துக் கட்டார் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இந்நிலையில், கட்டாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியர்களின் குடும்பத்தினரை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்தார்.

இது தொடர்பாக சமூக வலைத்தளமான தனது எக்ஸ் தளைத்ததில்,

“கட்டாரில் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியர்களின் குடும்பத்தினரைச் சந்தித்தேன். இந்த வழக்குக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக அவர்களிடம் தெரிவித்தேன். அவர்களது கவலைகள் மற்றும் வலிகளை முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறோம். அவர்களை விடுதலை செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று அவர்களிடம் உறுதி அளிக்கப்பட்டது” என பதிவிட்டுள்ளார்.

> **“ கட்டாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்தியர்களின் குடும்பத்தினரை சந்தித்த அமைச்சர் ஜெய்சங்கர், அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று உறுதி அளித்தார்**

# “இந்தியாவின் முடிவால் வெட்கப்படுகிறேன்”

உலக நாடுகளில் மேற்கத்திய நாடுகள், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும், அரபு நாடுகள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் நிலைப்பாட்டை எடுத்துள்ளன.

இந்நிலையில், ஐ.நா. கூட்டமைப்பின் பொதுச்சபையில் (UNGA) “காசாவில் நிலையான அமைதிக்கு வழிவகுக்க உடனடியாக போர் நிறுத்தம் வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு அனைத்து அத்தியாவசியமான தேவைகளும் தங்கு தடையற்று கிடைக்க வேண்டும்,” என்றும் ஜோர்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜோர்டானின் தீர்மானத்திற்கு ஐ.நா. உறுப்பினர் நாடுகளில் 120 நாடுகள் ஆதரவும், அமெரிக்கா உள்ளிட்ட 14 நாடுகள் எதிர்ப்பும் தெரிவித்தன. இந்தியா உட்பட 45 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில், இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை இந்தியக் காங்கிரஸ் கட்சியின் (INC) பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி கண்டித்துள்ளார்.

இது குறித்து தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் “தன் கண்ணைப் பிடுங்கியவனின் கண்ணைப் பிடுங்க வேண்டும் எனும் எண்ணமும், செயலும், உலக மக்கள் அனைவரையும் குருடர்களாக்கி விடும்’ என தேசப்பிதா மகாத்மா காந்தி கூறியிருந்தார். ஜோர்தானின் போர் நிறுத்தத்திற்கான தீர்மானத்தில் பங்கேற்காததன் மூலம் நம் நாடு எந்த உயர்ந்த எண்ணங்களைத் தாங்கி பல காலங்களாக நிலை நிற்கிறதோ அவை அனைத்திற்கும் எதிரான நிலைப்பாட்டை இப்போது இந்தியா எடுத்துள்ளது. இந்த முடிவிற்காக ஒரு இந்தியனாக நான் வெட்கப்படுகிறேன்” என பதிவிட்டுள்ளார்.



உலகக் கிண்ணம்:

# இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா



இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், லக்னோவில் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்து உடனான போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 229/10 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 87 (101), சூரியகுமார் யாதவ் 49 (47), லோகேஷ் ராகுல் 39 (58) ஓட்டங்கள். பந்துவீச்சு: டேவிட் வில்லி 3/45, கிறிஸ் வோக்ஸ் 2/33, அடில் ரஷீட் 2/35, மார்க் வூட் 1/46)

இங்கிலாந்து: 129/10 (34.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: லியம் லிவிங்ஸ்டோன் 27 (46) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஷமி 4/22, ஜஸ்பிரிட் பும்ரா 3/32, குல்தீப் யாதவ் 2/24, இரவீந்திர ஜடேஜா 1/16)

போட்டியின் நாயகன்: றோஹித் ஷர்மா

இந்நிலையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

மெக்ஸிக்கோ குரான் பிறீ:

# சாதனை படைத்த மக்ஸ் வெர்ஸ்டப்பன்

மெக்ஸிக்கோ குரான் பிறீயானது திங்கட்கிழமை (30) அதிகாலை நடைபெற்ற நிலையில், இதில் தனது 16ஆவது வெற்றியைப் பெற்றுக் கொண்ட தான் இவ்வாண்டு சம்பியனாவதை ஏற்கனவே உறுதிப்படுத்திக் கொண்ட மக்ஸ் வெர்ஸ்டப்பன், ஓராண்டில் பெற்ற அதிக வெற்றிகள் 15 என்ற தனது சாதனையை தானே முறியடித்தார்.

பந்தயத்தை மூன்றாம் இடத்திலிருந்து ஆரம்பித்த றெட் புல் அணியில் வெர்ஸ்டப்பன் முதலாமிடம் பெற்ற நிலையில், ஆறாமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் மூன்றாமிடத்தைப் பெற்றிருந்தார்.

> **“ ஓராண்டில் பெற்ற அதிக வெற்றிகள் 15 என்ற தனது சாதனையை தானே முறியடித்தார்**



# லுக்காக்குவுக்காக ஏப்ரஹாமை வழங்கும் றோமா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியிலிருந்து கடனடிப்படையில் முன்களவீரரான றொமெலு லுக்காக்குவை இத்தாலிய சீரி ஏ கழகமான றோமா கைச்சாத்திட்டுள்ளது.

இந்நிலையில், தமது கழகத்தில் 30 வயதான லுக்காக்குவை நிரந்தரமாகக் கைச்சாத்திடும் பொருட்டு, செல்சியின் முன்னாள் முன்களவீரரான தமி ஏப்ரஹாமை அவர்களுக்கு மீண்டும் அளிப்பது குறித்து றோமா கருத்திற் கொள்வதாகக் கூறப்படுகிறது.





இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# யுனைட்டெட்டை தோற்கடித்த சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (29) இரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாக எர்லிங்க் ஹலான்ட் இரண்டு கோல்களையும், பில் பொடென் ஒரு கோலையும் பெற்றனர்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:


# சமநிலையில் நாப்போலி – ஏ.சி மிலன் போட்டி

## றோமாவை வென்ற இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், நடப்புச் சம்பியன்களான நாப்போலியின் மைதானத்தில் திங்கட்கிழமை அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், ஏ.சி மிலனுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஒலிவியர் ஜிரூட் பெற்றதோடு, நாப்போலி சார்பாக மட்டியோ பொலிடானோ, ஜியம்கொமோ றஸ்படோரி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (29) இரவு நடைபெற்ற றோமாவுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் வென்றது. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்க்கஸ் துராம் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 31 ஒக்டோபர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.